# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை – ஆண்டு III - 2018

## தீங்கியல் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. தீங்கியற் சட்டம் தவிர்ந்த ஏனைய விடயப் பரப்புகளில் சேத ஈட்டிற்கான குடியியல் வழக்கு நடவடிக்கைகள் கொண்டுவரப்படுவதற்குச் சாதகமாக கல்வியியலாளர்கள் வாதிட்டுள்ளனர். குடியியல் பிழைகளுக்கு நிவாரணமளிப்பதற்கு சட்டத்தின் ஏனைய கிளைகளை நாடுவதன் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக. உமது ஆராய்வை அவசியமான இடங்களில் உதாரணங்கள், தீர்ப்புச் சட்டம் மற்றும் சட்டவாக்கம் என்பவைகளால் ஆதாரப்படுத்துக.

(25 புள்ளிகள்)

2. டினிதி மற்றும் சரத் ஆகியோர் தமது முதலாவது பிள்ளையை எதிர்பார்த்திருந்தனர். அவர்களுடைய குறித்த தினத்திற்கு ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு முன்னதாக கடுமையான வயிற்று வலி பற்றி டினிதி முறையிட்டதுடன் புளோரன்ஸ் மெடிகெயர் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். அவர்களுடைய மகப்பேற்று கலந்தாலோசனை நிபுணரான வைத்தியர் இக்ரம் என்பவர், ஸ்கான் பரிசோதனையொன்றைத் தொடர்ந்து, சத்திரசிகிச்சை கருக்கலைப்பு ஒன்றிற்கான அவசியத்தை உறுதிப்படுத்தினார். வைத்தியர் இக்ரம் அச் சத்திரசிகிச்சையைச் செய்ததுடன் அவர் வெளிநாட்டிற்கு மாநாடு ஒன்றிற்குச் செல்ல வேண்டியிருந்ததால் அவரது கனிஷ்ட உத்தியோகத்தரான வைத்தியர் நிமானி பெரேரா என்பவரை டினிதியிடம் விட்டுச் சென்றார். வைத்தியர் இக்ரம், டினிதி ஆபத்துக் கட்டத்தில் இல்லையென சரத்திடம் உறுதிப்படுத்தியதுடன் வைத்தியர் பெரேராவிற்கு விசேட அறிவுறுத்தல்களை வழங்குவது அவசியமில்லை எனக் கருதினார். அடுத்த நாள், டினிதியின் நிலைமை மோசமடைந்த போது, அவளைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்க தங்குமறையில் உத்தியோகத்தர் எவரும் இருக்கவில்லை. அவர்களில் பெரும்பாலானவர்கள் சகவேலையாளொருவரின் திருமணத்திற்குச் சென்றதால் லீவில் இருந்தார்கள். அன்றிரவு டினிதி இறந்தாள்.

சளிசுரத்தால் ஏற்பட்ட கிருமி தொற்று அதிர்ச்சியே இறப்பிற்கான காரணம் என்பதனைப் பிரேத பரிசோதனை வெளிப்படுத்தியது. கர்ப்ப காலத்தில் தடிமல்-காய்ச்சலுக்கான தடுப்பூசி வழங்கப்பட்டு சத்திரசிகிச்சைக்குப் பின்னர் வைத்தியர்களாலும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களாலும் கவனமாகக் கண்காணிக்கப்பட்டிருந்தால்

டினிதியின் இறப்பைத் தவிர்த்திருக்கலாமென சரத்தின் நண்பரான வைத்தியர் அல்விஸ் என்பவர் பின்னர் சரத்திற்குக் கூறினார்.

(i) தவறுவிட்ட திறத்தவர்களுக்கு எதிராக வழக்கொன்றைக் கோப்பிட சரத் விரும்புகின்றான். பொருத்தமான சட்டத்தையும் அதிகாரங்களையும் ஆதாரம் காட்டி சரத்திற்கு ஆலோசனை வழங்குக.

**(20 புள்ளிகள்)**

(ii) சரத் அவனது வேலையை இழந்திருந்ததால் அந்த குடும்பச் செலவுகளை ஏற்கும் ஒரே ஆளாக டினிதி இருந்தாள். அவன் தான் தனது வாழ்வாதாரத்தை மற்றும் தனது மனைவியின் உறவு, அன்பு மற்றும் கவனிப்பை தான் இழந்துவிட்டதாகக் கோருகின்றான். இது தொடர்பான சாத்தியமான கோரிக்கையொன்றின் வெற்றி பற்றி சரத்திற்கு ஆலோசனை வழங்குக.

**(05 புள்ளிகள்)**

3. பொதியிடலில் பயன்படுத்தப்படும் பொலிஸ்ரரின் அச்சுகளுக்குப் பயன்படுத்தப்படும் பொலிஸ்ரரின் படிமங்களை அவர்கள் செய்யும் தொழிற்சாலை ஒன்றிற்குச் சொந்தக்காரனாக சேனா என்பவன் இருந்தான். சேனா தனது வீட்டிற்கு வெளியே வேலைத்தளமொன்றைக் கொண்டிருந்தான் என்பதுடன் அதனை களஞ்சியப்படுத்தலுக்காகப் பயன்படுத்தினான். பொலிஸ்ரரின் படிமங்களை வெட்டும் நோக்கத்திற்காக, சேனாவின் தொழிற்சாலையானது பொலிஸ்ரரின் குவியிலுக்கு அருகே வைத்திருந்த சில சூடான கடத்தி இயந்திரங்களைப் பயன்படுத்தியது. அவனது அயலவர்கள் அந்த வெட்டும் நடபடியானது அவர்களுடைய உயர் வதிவிட சுற்றாடலின் அமைதியைப் பாதிக்கின்றதென முறையிட்டதுடன் இலகுவில் தீப்பற்றக் கூடிய பரவக்கூடிய பிளாஸ்ரிக் பதார்த்தமொன்றாக அது உள்ள பொலிஸ்ரரினைக் களஞ்சியப்படுத்துவது பற்றியும் விசனங்களைத் தெரிவித்தார்கள். அப்படியிருந்த போதும் சேனா அந்த வியாபாரத்தைத் தொடர்ந்தான்.

ஒரு நாள் காலை பொலிஸ்ரரினை வெட்டுவது நடந்து கொண்டிருந்த போது, பொறியொன்று சூடான கடத்தியொன்றிலிருந்து வெளியேறியதுடன் தீ பற்றியது. அது சூடான கடத்தி இயந்திரங்களுக்கு அண்மையில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ்ரரின் தாள்களின் அடுக்கொன்றை எரித்ததுடன் அவனது வேலைத்தளத்திற்கு அருகே இருந்த சேனாவின் அயலவரின் காணியிலுள்ள கொட்டகைக்கும் பரவியது. அவர்களுடைய தோட்ட புனருத்தாரணத்திற்காக வைக்கோலையும் மரத்துண்டுகளையும் களஞ்சியப்படுத்தி வைக்க அந்த கொட்டகையானது பயன்படுத்தப்பட்டது. அன்று காலை கொண்டு வந்து களஞ்சியப்படுத்தப்பட்டவைகள் உட்பட களஞ்சியப்படுத்தப்பட்ட எல்லா வைக்கோலும் மரத்துண்டுகளும் முற்றாக எரிந்து அழிந்தன. அந்த நெருப்பானது செறிவான புகைகையைத் தோற்றுவித்ததுடன் அது அடுத்துள்ள வீடுகளின் சுவர்களில் கறைபடியச் செய்ததுடன் சேதப்படுத்தியது.

சேனாவின் பொறுப்புடைமையை கடும்பொறுப்பு (strict liability) மற்றும் தொல்லை (nuisance) விதிகளின் கீழ் ஆராய்க.

**(25 புள்ளிகள்)**

4. ‘கிறிஸ்பி சிப்’ என்பது நுவரெலியா பிராந்தியத்திலுள்ள விவசாயிகளிடையே விதைகளைப் பகிர்ந்தளிப்பதற்காக ஆய்வு உருளைக் கிழங்கு விதைகளை கோல்மன்ஸ் என்பதற்கு வழங்கிய உருளைக் கிழங்கு முறுகல் சீவல்களின் பிராந்திய உற்பத்தியாளர் ஒன்றாகும். நுவரெலியாவை விட கொழும்பில் உருளைக் கிழங்கின் விலை அதிகமாக இருந்தமையால், கொழும்பிற்கு உருளைக் கிழங்கை விற்பதன் மூலம் கோல்மன்ஸ்சும் உருளைக் கிழங்கு விவசாயிகளும் இலாபமீட்டும் வர்த்தகத்தைக் கொண்டிருந்தார்கள். பேர்னாட் என்பவன் உருளைக் கிழங்கு விவசாயிகளுள் ஒருவனாக இருந்தான். கோல்மன்ஸ் இற்கு வழங்கப்பட்ட விதைகள் பக்ரீரியா தொற்றுக்குள்ளாகி இருந்ததுடன் பேர்னாட்டின் உருளைக் கிழங்குகளும் தொற்றுக்குள்ளாகின. மேல் மாகாண நுகர்வோர் ஒழுங்கு விதிகள் தொற்றுக்குள்ளான உருளைக் கிழங்குகளின் இறக்குமதியையும் தொற்றுக்குள்ளான பண்ணையொன்றிலிருந்து 10 கிலோமீற்றர் சுற்றுவட்டத்தினுள் உள்ள பண்ணைகளிலிருந்தான உருளைக் கிழங்குகளின் இறக்குமதியையும் தடை செய்தன. இதன்விளைவாக, பேர்னாட்டும் ஏனைய உருளைக் கிழங்கு விவசாயிகளும் மூன்று வருடங்களுக்கு கொழும்பிற்கு உருளைக் கிழங்குகளைக் கொண்டு செல்வதிலிருந்து தடை செய்யப்பட்டனர்.

பேர்னாட்டும் உருளைக் கிழங்கு விவசாயிகளும் கொழும்பு சந்தைக்குச் செல்ல முடியாமை காரணமாக அவர்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பிற்காக கிறிஸ்பி சிப் இற்கு எதிராக வழக்கிட விரும்புகின்றனர். அத்தகைய சூழ்நிலைகளில் உருளைக் கிழங்குகள் இறக்குமதி செய்யப்படுவதைத் தடை செய்யும் மேல் மாகாண நுகர்வோர் ஒழுங்கு விதிகள் பற்றி கிறிஸ்பி சிப் அறிந்திருந்தது என்பது வெளிப்படுத்தப்பட்டது.

அவர்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பை ஈடுசெய்வது பற்றி பேர்னாட் இற்கும் ஏனையவர்களுக்கும் ஆலோசனை வழங்குக.

**(25 புள்ளிகள்)**

5. அனுரா, ரவி மற்றும் மாலன் ஆகியோர் கொழும்பிலுள்ள பிரபல்யமான ஆண்கள் பாடசாலையொன்றின் தரம் பன்னிரண்டு மாணவர்கள் ஆவார்கள். அனுரா ஒரு நாள் பின்னேரம் தன்பாலின உடல் விருத்தியாளர்களின் படங்களை இணையத்தில் தேடினான். இரண்டு உடல் விருத்தியாளர்கள் ஒருவரின் கால் மற்றையவரின் கால் மேலானதாகவும் – உடற்தொடுகையை காட்டுவதாக அவர்களது கைகள் இருந்த நிலையிலும் அவர்களிருவரும் பகுதியளவில் உடையணிந்து ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருக்கும் ஒன்றைக் கண்டான். உடல்விருத்தியாளரில் ஒருவரின் முகத்திற்காக உதவி அதிபரின் முகத்தின் படமொன்றையும் மற்றையதற்குப் பாடசாலை அதிபரின் முகத்தையும் பதிலிட்டு அப் படத்தை அனுரா மாற்றியமைத்தான். அப் படத்தில் பாடசாலைச் சின்னத்தின் படமொன்றையும் அவன் பதிலிட்டான். அதன் பின்னர் அனுரா அந்த மாற்றியமைக்கப்பட்ட படத்தை ரவிக்கு அனுப்ப அவன், அதன்பின்னர், அதனை செல்லிட தொலைபேசி மூலம் மாலனிற்கு அனுப்பினான். அவர்களுடைய பாடசாலை ஆண்களிடையே அப் படம் தீயாகப் பரவியது.

சில நாட்களின் பின்னர், ரவி அப் படத்தை வகுப்பின் போது ஆசிரியை ஒருவருக்கு காண்பித்தான் என்பதுடன் பின்னர் அப் படத்தை வர்ண பிரதி எடுத்ததுடன் விளையாட்டு மைதானமெங்கும் காட்டினான். மாலன், அப் படத்தை பாடசாலை அறிவித்தல்

பலகையில் துலாம்பரமாக இட்டான். ஆசிரியரொருவர் உடனடுத்து அதனைக் கண்டதுடன் அதனை அகற்றினார்.

அனுரா, ரவி மற்றும் மாலனுக்கு எதிராக வழக்கிட அதிபர் விரும்புகின்றார். ஆராய்க.

**(25 புள்ளிகள்)**

6. "பிரதிவாதியின் கவனயீன செயலால் அல்லது செய்யாமையால் ஏற்பட்ட இழப்பிற்காக அச் சூழ்நிலைகளில் வாதிக்கு இழப்பீடு அளிக்கப்படுதல் வேண்டுமென்பதை பொதுக் கொள்கை அக்கறைகள் தேவைப்படுத்தினால் நடத்தையானது பிழையானதாகும்."

- Harms JA in *Telematrix (Pty) Ltd t/a Matrix Vehicle Tracking v. Advertising Standards Authority SA*, 2006 (1) SA 461 (SCA)

மேலுள்ள கூற்றின் பயனுறுதன்மையை வழக்கிடக் கூடிய தீங்கியல்களின் பின்வரும் பரப்புகள் தொடர்பில் நுணுக்கமாக ஆய்ந்துரைக்க:

(i) செய்யாமை (omission) **(15 புள்ளிகள்)**

(ii) நரம்பு அதிர்ச்சி (nervous shock) **(10 புள்ளிகள்)**

உமது விடையானது பொருத்தமான தீர்ப்புச் சட்டத்தால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

7. பகரப் பொறுப்பு தொடர்பான ஆங்கிலச் சட்டக் கோட்பாடுகள் ... கடந்த பல வருடங்களாக விருத்தி செய்யப்பட்ட இலங்கை சட்டத்தினுள் மாற்றமின்றி அங்கீகரிக்கப்பட்டு ஏற்கப்பட்டுள்ளன. *Lister v. Hesley Hall Ltd* (2002) 1 AC 215 மற்றும் *Dubai Aluminium Co.Ltd v. Salaam* (2003) AC 366 ஆகிய வழக்குகளில் தொழில்தருநரொருவர் அங்கீகரிக்கப்படாத மற்றும் / அல்லது கருதப்பட்ட மற்றும் / அல்லது மோசடியான பிழையான செயலொன்றை கொண்டு நடாத்தினால், வேலையாளின் பிழையான செயல் மற்றும் அவர் புரிவதற்காக ஊழியத்திலமர்த்தப்பட்ட செயல்களின் வகை என்பவைகளுக்கிடையிலான தொடர்பின் நெருங்கிய தன்மையைப் பொறுத்து தொழில்தருநர் பொறுப்பாக்கப்படலாம்.

- Wanasundera J., PC., in *Krishnan Nalinda Priyadarshana v. Kandana Arachchige Nilmini Dhammika Perera* [2013] 1 Sri LR 155. P. 162.

ஊழியத்தின் பரப்பெல்லையைத் தீர்மானிக்கின்ற அண்மைய வளர்ச்சிகளுடன் தொடர்புறுத்தி இலங்கை உயர்நீதிமன்றத்தின் மேலுள்ள கூற்றை மதிப்பீடு செய்க. ஆங்கிலச் சட்டம் மற்றும் தென்னாபிரிக்கச் சட்டத்தை குறிப்பிட்டு பொருத்தமான தீர்ப்புச் சட்டத்தால் உமது அபிப்பிராயத்தை ஆதாரப்படுத்துக.

**(25 புள்ளிகள்)**

*****

UNIVERSITY OF COLOMBO, SRI LANKA

FACULTY OF LAW

**BACHELOR OF LAWS EXAMINATION, YEAR III – 2018**

# Law of Delict

(Three Hours)

Total Number of Questions: **07**

Answer **FOUR** questions and **no more.**

(Candidates will be penalized for illegible handwriting.)

---

1. Scholars have argued in favour of civil actions for damages to be brought in areas other than the law of delict. Compare and contrast the advantages and disadvantages of resorting to other branches of law to remedy civil wrongs. Support your discussion with examples, case law and legislation, where necessary.

**(25 marks)**

2. Dinithi and Sarath were expecting their first child. About a month prior to their due date, Dinithi complained of severe abdominal pain and was admitted to the Florence Medicare Private Hospital. Dr. Ikram, their consultant gynecologist, following a scan, confirmed the necessity of a surgical abortion. Dr. Ikram performed the surgery and assigned his junior Dr. Nimani Perera to Dinithi, as he had to leave for a conference abroad. Dr. Ikram assured Sarath that Dinithi was out of danger and thought it was unnecessary to give specific instructions to Dr. Perera. The next day, while Dinithi's condition deteriorated, there was hardly any staff at the ward to continuously monitor her. A majority of them were on leave attending the wedding of a colleague. Dinithi died that night.

The post mortem revealed the cause of death as septic shock caused by influenza. Sarath's friend Dr. Alwis later on told him that Dinithi's death could have been avoided if she was administered flu vaccine during pregnancy and was carefully monitered by the doctors and the hospital staff subsequent to the surgery.

i. Sarath wishes to file a case against the defaulting parties. Advise Sarath citing relevant law and authorities. **(20 marks)**

ii. Dinithi was the sole breadwinner of the family as Sarath had lost his job. He claims that he lost his sustenance and companionship, love and care of his wife. Advise Sarath on the success of a possible claim in this regard. **(5 marks)**

3. Sena owned a factory where they made polystyrene blocks used for polystyrene mouldings utilized in packaging. Sena had a workshop outside his house and used the same for storage. For the purpose of cutting polystyrene blocks, Sena's factory used a few hot wire machines positioned alongside the polystyrene stacks. His neighbours complained that the cutting procedure disturbed the peace of their highly residential neighbourhood and raised concerns about storing polystyrene, as it is a versatile plastic material that is highly inflammable. Sena, nevertheless, continued the business.

One morning when the cutting of polystyrene was underway, a spark escaped from a hot wire and started a fire. It burnt a pile of polystyrene sheets that were kept close to the hot wire machines, and spread to a shed in Sena's neighbor's land which adjoined his workshop. The shed was used to store hay and wood chips for renovating their garden. All the stocks of hay and wood, including the ones brought and stored that morning, were completely burnt and destroyed. The fire generated a thick smoke that stained and damaged the walls of adjacent houses.

Discuss the liability of Sena under the rules of strict liability and nuisance.

**(25 marks)**

4. 'Crispy Chip' is a regional manufacturer of potato crisp chips which supplied investigational potato seeds to 'Colmans' for distribution of seeds among the farmers in the Nuwara-eliya region. Colmans and the potato farmers had a profitable trade, selling potatoes to Colombo, as the price of potatoes in Colombo was higher than in Nuwara-eliya. Bernard was among the potato farmers. The seeds supplied to Colmans were infected with bacterial matter and Bernad's potatoes became infected. Western Province Consumer Regulations prohibited the import of infected potatoes and the import of potatoes from farms within a 10 kilometre radius surrounding an infected

farm. As a result, Bernard and other potato farmers were prohibited from transporting potatoes to Colombo for three years.

Bernard and the potato farmers wish to sue Crispy Chip for the economic loss they had suffered as a result of the loss of access to the Colombo market. It was revealed that Crispy Chip was aware of the Western Province Consumer Regulations prohibiting the importing of potatoes in such circumstances.

Advise Bernard and others on the recovery of economic loss that they have suffered.

**(25 marks)**

5. Anura, Ravi and Malan are grade twelve students in a popular boy's school in Colombo. Anura, one evening, searched the internet for pictures of gay bodybuilders. He found one which showed two bodybuilders, both partly dressed and sitting next to each other in a rather compromising position – a leg of one was over the leg of the other – and the position of their hands was indicative of physical contact. Anura edited the photograph by substituting a photo of the vice principal's face for the face of one bodybuilder and the face of the principal of the school for the other. He also placed a picture of the school's badge in the photograph. Anura then sent the manipulated photo to Ravi who, in turn, sent it by cell phone to Malan. The picture spread like fire amongst the boys in their school.

   Few days later, Ravi showed the picture to a female teacher during class and later printed the photo in colour and showed it around the playground. Malan, placed the photograph prominently on the school's notice board. A teacher saw it quite soon and removed it.

   The Principal wishes to sue Anura, Ravi and Malan. Discuss. **(25 marks)**

6. "Conduct is wrongful if public policy considerations demand that in the circumstances the plaintiff has to be compensated for the loss caused by the negligent act or omission of the defendant."

   - Harms JA in *Telematrix (Pty) Ltd t/a Matrix Vehicle Tracking v Advertising Standards Authority SA*, 2006 (1) SA 461 (SCA)

Critically analyse the effect of the above statement on actionable delicts in the areas of;

i. Omission **(15 marks)**

ii. Nervous shock **(10 marks)**

Your answer should be supported with relevant case law.

7. "English Law principles of vicarious liability.... have got invariably accepted and adopted into the Sri Lankan Law, which has been developed over the years. In *Lister vs. Hesley Hall Ltd.* (2002) 1 AC 215 and in *Dubai Aluminium Co. Ltd. Vs. Salaam* (2003) AC 366, it was held that if an employer carries out a wrongful act which is unauthorised and/or intentional and/or fraudulent, the employer may be held liable depending upon the closeness of the connection between the employee's wrongdoing and the class of acts of which he was employed to perform."

   - Wanasundera J., PC., in *Krishnan Nalinda Priyadarshana Vs. Kandana Arachchige Nilmini Dhammika Perera* [2013] 1 SRI L.R.155, p.162.

Evaluate the above dicta of the Supreme Court of Sri Lanka, with regard to the latest developments to determine the scope of employement. Support your opinon with relevant case law, referring to English law and the law of South Africa.

**(25 marks)**

............................................